[2002 மே 3

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 நாட்களாக, சோமனூர் மற்றும் பல பகுதிகளில் விசைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே, ஒத்திவைப்பு அறிவிப்பை உங்களிடத்திலே கொடுத்திருந்தேன். அந்த ஒத்திவைப்பு அறிவிப்பை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது எனது ஆய்வில் இருக்கிறது. சம்பந்தப்பட்டத் துறையிடம் விளக்கம் கேட்டு, பிறகு அதனை எப்போது எடுத்துக்கொள்வது என்று சொல்கிறேன்.*

(ஆ) காவிரி நீர் 2001-2002-ல் பெறப்பட்ட அளவு

திரு. ஜி. பழனிசாமி: *தலைவர் அவர்களே,.....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜி. பழனிசாமி.*

திரு. ஜி. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவினுடைய மாண்புமிகு அமைச்சர் எச்.எம். பட்டேல் அவர்கள் —நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையின்போது கர்நாடகாவிலிருந்து சரியாக தண்ணீர் வழங்கப்படவில்லையென்று கூறினார்கள்—தற்போது 185 டி.எம்.சி. தண்ணீரை நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறோம், அமைச்சரவர்கள் தவறான தகவலை அவையிலே அறிவித்திருக்கிறார் என்று இந்த நேரத்திலே தெரிவித்திருக்கிறார். அவர் சொல்வது உண்மையா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சட்டமன்ற கூட்டத் தொடரிலே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே பதில் அளித்துச் சொன்னது உண்மையா? இதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் பெற விரும்புகிறோம். அப்படி கொடுக்காத தண்ணீர் பற்றிய விவரங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*